[பேரவைத் தலைவர்] [2010 மே 12

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 171, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

171—

ஆராய்ச்சி நிலையம்

***47589—திரு. தி.க. ராஜா:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பத்தூர் தொகுதி, மாடப்பள்ளியில் பருத்தி விதை ஆராய்ச்சி நிலையம் மற்றும் பூச்சிக் கொல்லி ஆராய்ச்சி நிலையம் துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, மாடப்பள்ளியில் பருத்தி விதை ஆராய்ச்சி நிலையம் மற்றும் பூச்சிக் கொல்லி ஆராய்ச்சி நிலையம் துவக்க அரசிடம் கருத்துரு ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர், மாடப்பள்ளி உழவர் சேவைக் கூட்டுறவு வங்கி என்பது தமிழ்நாட்டிலேயே இரண்டாவது பெரிய பருத்தி விற்பனை நிலையம் ஆகும். கொங்கணாபுரத்தை அடுத்து

2010 மே 12]

திருப்பத்தூர். 1995-1996 ஆம் ஆண்டிலே 25 கோடி ரூபாய் அளவிலே பருத்தி கொள்முதல் செய்யப்பட்டு, ஆலைகளுக்கு விற்கப்பட்டது. 2001 ஆம் ஆண்டு வேலூர் மாவட்டத்தில் 65 இலட்சம் ரூபாயிலே மைய அரசால் ஒரு ஆராய்ச்சிப் பண்ணை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, பிறகு அது இராணிப்பேட்டை, நவல்பூரிலே போடுவதாக சொல்லப்பட்டு, பிறகு அது ஈரோடு மாவட்டத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. ஏன் இதை நான் கேட்கிறேன் என்று சொன்னால், இன்றைக்குத் தரமான விதை கிடைப்பதில்லை, உரங்களிலேகூட கலப்படம். வீரியமான பூச்சிக் கொல்லி மருந்துகள் இல்லாத காரணத்தினாலே 25 கோடி ரூபாய்க்கு உற்பத்தியான பருத்தி, இன்றைக்கு 5 கோடி ரூபாய் அளவிலே குறைந்து வருகிற காரணத்தினாலே, தமிழக விவசாயிகள், குறிப்பாக பருத்தி விவசாயிகள் நலனைக் கருத்திற்கொண்டு, இதுபோன்ற போலியான விதைகளைக் கண்டுபிடிப்பதற்கும், தரமற்ற பூச்சிக் கொல்லி மருந்துகளை ஆராய்ச்சி செய்வதற்கும், மைய அரசினுடைய உதவியோடு இங்கு ஒரு ஆராய்ச்சி நிலையம் கொண்டு வந்தால், பருத்தி உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுடைய வாழ்க்கைத் தரம் உயரும். எனவே, மாண்புமிகு அமைச்சர் மறுபரிசீலனை செய்து அதைக் கொண்டு வர முயற்சி செய்வாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-35

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா அவர்கள், திருப்பத்தூரில் பருத்தி விற்பனையாவதைப் பற்றி இங்கு துணைக் கேள்விகளை எழுப்புகின்றார். ஆனால், மூலக் கேள்வி என்பது, பருத்தி ஆராய்ச்சி நிலையம் மற்றும் பூச்சிக் கொல்லி ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா என்பதுதான். அதற்கு நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புவது, தமிழகத்தில் கோயம்புத்தூர் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், விருதுநகர் மாவட்டம், ஸ்ரீவில்லிபுத்தூர் பருத்தி ஆராய்ச்சி நிலையம், பெரம்பலூர் மாவட்டம், வேப்பந்தட்டை, பருத்தி ஆராய்ச்சி நிலையம், கோவில்பட்டி, வேளாண்மை ஆராய்ச்சி நிலையம் மற்றும் விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை, மண்டல ஆராய்ச்சி

[2010 மே 12

நிலையம் ஆகிய ஐந்து இடங்களில் தமிழ்நாடு வேளாண்மைக் கழகத்தால் பருத்திப் பயிருக்கான ஆராய்ச்சி தற்போது நடத்தப்பட்டு வருகின்றது.

பொதுவாக ஒரு ஆராய்ச்சி நிலையம் துவங்க வேண்டுமானால், 50 ஏக்கர் சாகுபடிக்கேற்ற நிலம் தேவைப்படும். கட்டடங்கள், அடிப்படை வசதிகளுக்கு ஒரு கோடி ரூபாயும், ஒவ்வொரு ஆண்டும் தொடர் செலவினங்களுக்காக 50 இலட்சம் ரூபாயும் தேவைப்படும். ஆகவே, அங்கு போதிய இடம் கிடைக்காது என்ற நிலையும், இன்னும் சொல்லப்போனால், அங்கே பருத்தி சாகுபடி மற்றும் உற்பத்தி குறைவுதான். தரமான விதையைக் கண்டுபிடிப்பதற்கு, அதை விவசாயிகளுக்கு வழங்குவதற்கு ஐந்து, ஆறு இடங்களில் பருத்தி ஆராய்ச்சி நிலையம் இருப்பதனால், வேலூரிலே, திருப்பத்தூரிலே தனியாகத் தொடங்க வேண்டிய அவசியமில்லையென்று அரசு கருதுகின்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுக்குச் சொந்தமான இடம் ஏலகிரி மலையிலே, ஜவ்வாது மலையிலே இருக்கின்றது. அந்த இடத்தைக்கூட வேண்டுமென்றால் பயன்படுத்திக்கொள்ளலாம். அதோடு மட்டுமல்லாமல் உழவர் சேவைக் கூட்டுறவுச் சங்கத்திற்கு சொந்தமான இடம் திருப்பத்தூரிலே இருக்கிறது. பருத்தி உற்பத்திக் குறைவு என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டுகூட, 700 லாரிகள், 25,000 குவின்டால் பருத்தி அங்கே கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. பருத்தி சரியாக விளையவில்லை. காரணம், ராசி மற்றும் மைகா என்கிற இரண்டுவிதமான நல்ல விதைகள்தான் கிடைக்கின்றன. கர்நாடக மாநிலத்திலே reject ஆகிய விதைகளையெல்லாம் இங்கே கொண்டு வந்து, தமிழ்நாட்டில் இருக்கிற Agro Service கடைகளில் கொடுத்துவிட்டு, போலியான விதைகளை அவர்கள் விற்கிறார்கள். அதனால் விவசாயிகளுக்கு yield கிடைப்பதில்லை. Yield கிடைக்காத காரணத்தினால்தான் பருத்தி உற்பத்தி குறைகிறது. ஆகவே கர்நாடகாவில் என்ன செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், போலி விதையை விற்பவர்கள். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ராஜா, தமிழ்நாட்டிலுள்ள பருத்தி ஆராய்ச்சி மையத்தை பற்றி மட்டும் கேளுங்கள். கர்நாடகா, ஆந்திரா என்று போய்க்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?

2010 மே 12]

திரு. தி.க. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே போலி விதைகளை விற்பவர்களுக்கு ஏழு ஆண்டு கடுங்காவல் தண்டனை கொடுக்கிறார்கள். அரசே மானிய விலையில் விதையைக் கொடுக்கிறது. அதைப்போல, தமிழ்நாடு அரசும் போலி விதைகளை விற்பவர்களைக் கடுமையாகத் தண்டிக்கவும், அரசாங்கமே நல்ல தரமான விதைகளையும், பூச்சிக் கொல்லி மருந்துகளையும் வழங்குவதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய துறை முன்வருமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறையின்மூலம், அது விதை நெல்லாக இருந்தாலும், பருத்தி போன்ற விதைகளாக இருந்தாலும், இவற்றையெல்லாம் விற்பனை செய்யக்கூடிய இடங்களில் துறையின் அலுவலர்கள் சென்று, மாதிரி எடுத்து, தரமான பருத்தி விதைகள்தானா என்று பரிசோதிக்கிறார்கள். அதிலே தரமில்லாத விதைகள் இருக்குமானால், கடுமையான நடவடிக்கையை தற்போதும் அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மாணிக்கம்.

திரு. இரா. மாணிக்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், முதலைப்பட்டி ஊராட்சியில் அரசு தோட்டக்கலைப் பண்ணை 1978 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, இயங்கி வருகிறது. மொத்தம் 60 ஏக்கர் பரப்பளவு கொண்ட இந்த தோட்டக்கலைப் பண்ணையில், பத்து ஏக்கர் பரப்பளவில் மட்டுமே பல்வேறு செடிகள் உற்பத்தி செய்யப்பட்டு, அரசு மற்றும் வனத் துறைக்கு அனுப்பப்படுகின்றன. மீதமுள்ள 50 ஏக்கர் நிலம் பராமரிப்பு இல்லாமல் இருக்கிறது.

முதலைப்பட்டி மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலங்களில் விவசாயிகள் பல்வேறு பூச்செடிகளை பயிர் செய்கிறார்கள். பூச்செடிகள் பயிர் செய்வதற்குத் தேவையான விதைகள், செடிகள், மற்றும் குச்சிகள் வாங்குவதற்காக இராமேஸ்வரம், மேட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளுக்கு,

விவசாயிகள் சென்று வாங்கி வருகிறார்கள். முதலைப்பட்டி தோட்டக்கலைப் பண்ணையில், விவசாயிகளுக்குப் பயிற்சி மையம் நிறுவி, செடி உற்பத்தி செய்வது பற்றிய செயல் முறை பயிற்சி அளித்தால், அந்தப் பகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகள் பயன் அடைவார்கள். ஆகவே, குளித்தலை தொகுதி, முதலைப்பட்டி தோட்டக்கலைப் பண்ணையில் தோட்டக்கலை விவசாயப் பண்ணை பயிற்சி மையம் அமைக்க, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமாய்த் தங்கள்மூலம் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 9-40

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கையை ஒரு விண்ணப்பமாக எழுதி அரசுக்குத் தருவாரானால், அதைப் பற்றி அரசு பரிசீலித்து முடிவு எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 172, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சௌந்திரபாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

172—

பேருந்து வசதி

***57306—திரு. அ. சௌந்திரபாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூரிலிருந்து சென்னைக்கு விரைவுப் பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தற்போது அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத் தடம் எண் 468-ல் ஊட்டியிலிருந்து சென்னைக்கு குன்னூர்

சட்டமன்ற LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS